| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 10/05/2023 | முதல் | 14/05/2023 |
| அறிக்கை எண் : | 037/ 2023 | வெளியீட்டு நாள் : | 09/05/2023 | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (04.05.2023 முதல் 08.05.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –14-05-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/05 | 05/05 | 06/05 | 07/05 | 08/05 | தேதி | நாள்-5 10/05 | நாள்-5 11/05 | நாள்-5 12/05 | நாள்-5 13/05 | நாள்-5 14/05 |
| 42.8 | 15.4 | 0.0 | 2.9 | 0.6 | மழை (மி.மீ) | 3 | 0 | 2 | 0 | 0 |
| 36 | 35 | 30 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 35 | 35 | 34 | 34 |
| 24 | 24 | 26 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 23 | 23 | 22 | 22 |
| 6 | 7 | 6 | 8 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 8 | 8 | 8 |
| 92 | 97 | 78 | 87 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 74 | 72 | 74 | 74 | 76 | | 40 | 30 | 30 | 30 | 30 |
| 4 | 4 | 10 | 2 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 6 | 4 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | **காற்றின் திசை** | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 10, 13 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 8 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் மே 10, 11 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடைஅமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில்.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில்

மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப் புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டு வந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மல்லிகை, எள்,** காலநடை

**மல்லிகை**:

- மல்லிகை மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள் மல்லிகைச் செடி ஒன்றிற்கு 60 கிராம் தழைச்சத்து, 120 கிராம் மணிச்சத்து மற்றும் 120 கிராம் சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய உரங்களை இடலாம்.
- 470 கிராம் இப்கோ காம்ப்ளக்ஸ் உரம், 30 கிராம் யூரியா ஆகியவற்றை 10 கிலோ தொழுஉரத்துடன் கலந்து செடியினைச் சுற்றி இட்டு மண்ணோடு கலக்கச் செய்ய வேண்டும்.

**எள்**:

- எள் பயிரில் சாம்பல் நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவில் டெபுகானசோல் மருந்துடன் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி என்ற அளவில் ஒட்டுப்பசை சேர்த்து கலந்து தெளிக்க வேண்டும்.

காலநடை:

- ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடாப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்தினை மே - ஜீன் மாதங்களில் அளிக்கலாம். ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேளையில் வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.